# யாதவர் கல்லூரியில் YCL 2023 கிரிக்கெட் போட்டி

மதுரை யாதவர் கல்லூரியில் YCL 2023 கிரிக்கெட் போட்டி கடந்த நான்கு நாட்களாக நடைபெற்ற நிலையில் இன்று (28-10-2023) அரையிறுதிப் போட்டிகள் நடைபெற்றன. முதல் அரை இறுதிப் போட்டியில் மன்னர் திருமலை நாயக்கர் கல்லூரியும் சவுராஷ்டிரா கல்லூரியும் களம் கண்டன. இப்போட்டியில் மன்னர் திருமலை நாயக்கர் கல்லூரி வெற்றி பெற்று இறுதிப்போட்டிக்கு முன்னேறியது. கோபிகரன் ஆட்டநாயகன் விருதைத் தட்டிச் சென்றார். இரண்டாவது அரையிறுதிப் போட்டி அமெரிக்கன் கல்லூரிக்கும் யாதவர் கல்லூரிக்கும் இடையே நடைபெற்றது. இப்போட்டியில் அடைந்த வெற்றியால் அமெரிக்கன் கல்லூரி இறுதிப் போட்டிக்கு செல்லும் வாய்ப்பைப் பெற்றது. அமெரிக்கன் கல்லூரியைச் சார்ந்த வசந்த குமார் 5 விக்கெட்டுகளை வீழ்த்தி ஆட்டநாயகன் விருதைப் பெற்றார். மூன்றாவது இடத்திற்கான போட்டியில் யாதவர் கல்லூரியும் சவுராஷ்டிரா கல்லூரியும் கலந்து கொண்டனர். வெற்றி பெற்ற யாதவர் கல்லூரி மூன்றாம் இடத்தைத் தக்க வைத்தது. சிறப்பாக விளையாடிய யாதவர் கல்லூரி வீரர் சிவாவிற்கு ஆட்டநாயகன் விருது வழங்கப்பட்டது. விறுவிறுப்பாக நடந்த இறுதிப் போட்டியில் மன்னர் திருமலை நாயக்கர் கல்லூரியும் அமெரிக்கன் கல்லூரியும் விளையாடின. இந்த போட்டியில் மன்னர் திருமலை நாயக்கர் கல்லூரி அணி சிறப்பாக விளையாடி வெற்றி பெற்று வெற்றிக் கோப்பையைத் தட்டிச் சென்றது. அந்த அணிக்கு முதல் பரிசுக்கான பரிசுத்தொகை ரூபாய் 25000 வழங்கப்பட்டது. இரண்டாம் இடம் பிடித்த அமெரிக்கன் கல்லூரி அணிக்கு கோப்பையும் பரிசுத் தொகையாக ரூபாய் 15,000 வழங்கப்பட்டது. இறுதிப் போட்டியில் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்திய மன்னர் திருமலை நாயக்கர் கல்லூரி அணியின் வீரர் சந்தோஷ் ஆட்டநாயகன் விருதைப் பெற்றார். மூன்றாவது இடம் பிடித்த யாதவர் கல்லூரி கோப்பையையும் பரிசு தொகையாக ரூபாய் 10,000 பெற்றது. ஒட்டுமொத்தமான போட்டிகளில் சிறந்து விளையாடிய மன்னர் திருமலை நாயக்கர் கல்லூரி அணியின் வீரரான கோபிகரனுக்கு தொடர் நாயகன் விருது வழங்கப்பட்டது

பரிசளிப்பு விழாவில் **உயர்திரு. KP. நவநீதகிருஷ்ணன்** முன்னாள் தாளாளர் & செயலாளர் யாதவா கல்லூரி மற்றும் சேர்மன் பார்க் குழுமம், **உயர்திரு. V S P சோலைமலை பிச்சை** சேர்மன், சோலைமலை குரூப்ஸ், **உயர்திரு. வேலுச்சாமி யாதவ்** உயர்மட்டக் குழுத் தலைவர், யாதவர் பேரவை,

**திரு. T.N.சுப்பையா** முன்னாள் ஆட்சி மன்றக் குழு உறுப்பினர் மற்றும் அபிராமி ஹோட்டல்ஸ் உரிமையாளர், **திரு. RVN.கண்ணன்** செயலாளர் யாதவர் கல்லூரி, **திரு.S.ஜெயராமன்** தலைவர் யாதவர் கல்லூரி, மற்றும் உரிமையாளர் அண்ணாமலை ஹோட்டல்ஸ், **திரு. SP. சிவராமகிருஷ்ணன்** துணைத் தலைவர் யாதவர் கல்லூரி, **திரு. S. முத்துகிருஷ்ணன் (எ) கிட்டு** இணைச்செயலாளர் யாதவர் கல்லூரி, **திரு. சி. கிருஷ்ணவேல்** பொருளாளர் யாதவர் கல்லூரி, **திரு. N.மணிச் செல்வம்** ஆட்சிக் குழு உறுப்பினர் யாதவர் கல்லூரி, **திரு. P. செந்தில்** ஆட்சிக்குழு உறுப்பினர் யாதவர் கல்லூரி, **திரு. V. பாலகிருஷ்ணன்** ஆட்சிக்குழு உறுப்பினர் யாதவர் கல்லூரி **முனைவர் B.மதியழகன்** முதல்வர் (பொறுப்பு), முனைவர் **M. பாலசுப்பிரமணியம்** தேர்வாணையாளர் யாதவர் கல்லூரி, **முனைவர் நெல்சன் எட்வர்ட் ஞான ஜோயல்** உடற்கல்வி இயக்குனர், **முனைவர் A. ராஜகோபால்** இயக்குனர் சுயநிதி யாதவர் கல்லூரி, **முனைவர் S. பாண்டிக்குமார்** உதவி ஒருங்கிணைப்பாளர் YCL 2023, ஆகியோர் கலந்து கொண்டு பரிசுகளை வழங்கினர். பரிசளிப்பு விழா நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை யாதவர் கல்லூரி YCL 2023 கமிட்டியாளர்கள் செய்திருந்தினர்.